மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் இன்று காலை அறிவுறுத்தியபடி புளியங்குடி நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளில் செயல்படுகின்ற தேனீர் கடைகள், குளிர்பான கடைகள், பழஜீஸ் கடைகள் மற்றும் உணவகங்கள் ஆகியவற்றை நடத்துகின்ற உரிமையாளர்களுக்கு நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து கொரோனா வைரஸ் தொற்று சம்மந்தமாக 03.06.2020 இன்று மாலை 5.30 மணியளவில் விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட்டது.,

கூட்ட நடவடிக்கைகள்

1. தேனீர் கடைகளை பொறுத்தவரையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தியபடி மறு அறிவிப்பு வரும் வரை தற்காலிகமாக பேப்பர் கப்பில் தேனீர் வழங்க உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்து
2. கண்ணாடி டம்ளர் எவர்சில்வர் டம்ளர் முற்றிலுமாக தவிர்க்குமாறு தெரிவிக்கப்பட்டது.
3. உணவகங்களில் கை கழுவுவதற்கு கண்டிப்பாக தண்ணீர் வசதி மற்றும் சோப்பு வசதி செய்து இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.
4. உணவகங்களில் பணியாற்றிடும் பணியாளர்கள் கையுறை மற்றும் முககவசம் கண்டிப்பாக அணியவேண்டுமென அறிவுறுத்தப்பட்டது.
5. சாப்பிட்ட பின் ஒவ்வொரு முறையும் மேஜையை லைசால் அல்லது டெட்டால் கொண்டு கிருமி நீக்கம் செய்யப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது.
6. கடைக்கு வருகின்ற வாடிக்கையாளர்கள் கண்டிப்பாக சமூக இடைவெளியை பின்பற்ற அறிவுறுத்தப்பட்டது.
7. குளிர்பான கடைகள் மற்றும் பழஜீஸ் கடைகளில் குளிர்பானம் பழஜீஸ் வழங்குவதற்கு கண்ணாடி மற்றும் சில்வர் டம்ளர்களை தவிர்த்து பேப்பர் கப்பில் வழங்க அறிவுறுத்தப்பட்டது.



